மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 25 ஆம் நாள் அன்று காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

79. வருவாய்த் துறையின் 1925 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ஆம் நாளிடப்பெற்ற 313 ஆம் எண் அறிவிப்பில் வெளியான விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாளிடப்பெற்ற 499— ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1923 ஆம் ஆண்டு நில அளவை—எல்லைக் கோடுகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1923) 26 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

80. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்தவேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 421 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

81. வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 ஆம் நாளிடப்பெற்ற I (1)/CTRE/705/80 ஆம் எண் அறிக்கையில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 4 ஆம் நாளிடப் பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 467 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

82. சென்னை, மணலியிலுள்ள இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல் லிமிடெட் நிறுவனம் விற்பனை செய்யும் பாலியெஸ்டர் ஸ்டேபிள் பைபருக்கு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு வணிகரும் செலுத்த

வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் நாளிடப்பெற்ற வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 489 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

83. தஞ்சாவூர் மாவட்டம் சாக்கோட்டையிலுள்ள தூய இருதய தொழுநோய் நிலையச் சங்கத்திற்கு விற்பனை செய்யப் பெறும் எக்ஸ்ரே புகைப்படச் சுருளுக்கு தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் எந்த ஒரு வணிகரும் செலுத்த வேண்டிய விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து 1981 ஆம் ஆண்டு மே திங்கள் 11 ஆம் தேதியிடப்பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 658 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

84. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையில் சில மாற்றங்கள் செய்வது குறித்து 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளிடப் பெற்ற வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 741 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ, அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

13. 1970–71, 1971–72 மற்றும் 1972–73 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஏழாவது பேரவை) (தமிழ், ஆங்கிலம்).